5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

102. கன்னியாகுமரி, ஈத்தாமொழி முறைப்படுத்தப்பட்ட அங்காடியின் முகவரி மாற்றம் குறித்து வேளாண்மைத் துறையின் 15–3–1988ஆம் நாளிட்ட 425-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

103. 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24–3–1988-ஆம் நாளிட்ட 467-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

104. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1987–88-ஆம் ஆண்டிற்கான முப்பதாவது ஆண்டறிக்கை[1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

106. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

107. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை 9அறிக்கை மற்றும் 1987–88ம் ஆண்டிற்

1989 ஏப்ரல் 28]

கான துணை நிதிநிலை அறிக்கை (1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

138. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

139. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை.